2019 ஜூலை 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், அவருடைய கொளத்தூர் தொகுதியில் நடைபெறுகின்ற இரயில்வே மேம்பாலப் பணிகள் குறித்து குறிப்பிட்டு, அதனுடைய அவசியத்தைப் பற்றியும் இங்கே குறிப்பிட்டார். மேலும், இரயில்வே மேம்பாலப் பணிகள் நடைபெறும் இடங்களில் சம்பந்தப்பட்ட துறைகளையெல்லாம் ஒரு குழுவாக அமைத்தால்தான் பணிகளை விரைவாக மேற்கொள்ள முடியும் என்றும் இங்கே கருத்து தெரிவித்தார். அது நல்ல கருத்துதான். அதுபோல, முன்னாள் மத்திய அமைச்சருக்கு இரண்டு முறை கடிதங்கள் எழுதியிருந்ததாகவும் அவர் இங்கே குறிப்பிட்டார். இரயில்வே துறைக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், அதற்காக சென்னை மாநகராட்சியால் ஒப்பந்தமும் கோரப்பட்டிருப்பதாகவும் அவரே இங்கே தெரிவித்திருக்கிறார். இரயில்வே துறைக்கு கட்ட வேண்டிய அந்த 10 கோடி ரூபாயை உடனடியாகச் செலுத்தி, கண்டிப்பாக, சென்னை மாநகராட்சி அந்தப் பணியை கூடிய விரைவில் வேகமாக முடித்துத்தர நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 134, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

134—

சட்டக் கல்லூரி

***36617—திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரத்தில் சட்டக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

[2019 ஜூலை 18

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரத்தில் சட்டக் கல்லூரி துவக்குவதற்கான கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்கள்.*

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம், மாவட்டத்தின் தலைநகராக இருக்கக்கூடிய நிலையில், அங்கே மாவட்ட நீதிமன்றம் தொடங்கப்பட வேண்டும், செங்கல்பட்டிலிருந்து மாற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கையினை வைத்தபோது எங்களுடைய கழகத் தலைவர் அவர்கள் முதல்வராக இருந்தபோது பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் 100-வது ஆண்டை முன்னிட்டு, இரண்டு மாவட்டங்களாகப் பிரித்து மாவட்ட நீதிமன்றம் இரண்டினை காஞ்சிபுரத்திற்கு வழங்கியிருக்கின்ற நிலையில், மாவட்ட நீதிமன்றம் எங்கு இருக்கின்றதோ அங்கே சட்டக் கல்லூரி துவங்கலாம் என்ற பரிந்துரையையும்,* Law Commission *மூலமாகவும்* Bar Council of India*-வின் பரிந்துரைகள் இருக்கின்ற நிலையில், அங்கே தொடங்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை வலியுறுத்தி,* Writ Petition No.29536 and 29777/2014 *என்ற வழக்கில் அங்கே நீதிமன்றத்தில் வைக்கப்பட்ட மிக முக்கியமான கேள்விகள் என்னவென்று சொன்னால், தமிழ்நாட்டில் போதுமான அளவிற்கு சட்டக் கல்லூரிகள் இருக்கின்றனவா? அதனைத் தொடர்ந்து தனியார் சட்டக் கல்லூரிகளைத் தொடங்க வேண்டாம் என்று கொள்கை முடிவு எடுக்கப்படுமா என்ற கேள்வி எழுந்தபோது அரசின் சார்பாக வைத்த பதில்,* Tamil Nadu Establishment of Private Law Colleges (Prohibition) Act, 2014 *என்ற சட்டத்தைக் கொண்டுவந்ததன் தாத்பரியமே, அரசமைப்புச் சட்டம்* Article 41*-ல் குறிப்பிடப்பட்டிருக்கக்கூடிய அடிப்படையில், அரசு சாமானிய மக்களுக்கு, ஏழையெளிய மக்களுக்கு,* socially backward and economically backward *மக்களுக்கு, இடஒதுக்கீட்டையும், குறைவான கட்டணத்தில் கல்வியையும் வழங்க வேண்டும் என்ற அடிப்படையில் அரசே சட்டக் கல்லூரிகளைத் தொடங்க*

2019 ஜூலை 18]

இருப்பதாக தெரிவித்திருக்கிறது. அந்த அடிப்படையில், பல்வேறு சட்டக் கல்லூரிகள் தேவைப்படுகின்ற இந்தக் காலகட்டத்தில், சென்னையை ஒட்டி இருக்கக்கூடிய மாவட்டமாக காஞ்சிபுரம் இருக்கின்ற காரணத்தினால், தேவை இருக்கின்றது என்பதனால், அதனைப் பரிசீலித்து மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் சட்டக் கல்லூரியினைத் தொடங்க முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கின்ற காஞ்சிபுரம் மாவட்டத்திலே, ஏற்கெனவே இரண்டு சட்டக் கல்லூரிகள் உள்ளன. சென்னையில் உள்ள சட்டக் கல்லூரியினை இரண்டாகப் பிரித்து ஒன்று காஞ்சிபுரம் மாவட்டம், புதுப்பாக்கம் கிராமத்திலும், மற்றொன்று திருவள்ளூர் மாவட்டம் பட்டரைப்பெரும்புதூரிலும் அமைக்கப்பட்டுள்ளது. ஆகவே, காஞ்சிபுரம் மாவட்டத்தில் இரண்டு அரசு சட்டக் கல்லூரிகள் தற்போது இயங்கி வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல, இந்த அரசு நீதிமன்றத்தில் சொன்னதுபோல, மாணவர்களின் நலன் கருதி அரசே சட்டக் கல்லூரிகளை ஆரம்பிக்க உள்ளது. தனியார் சட்டக் கல்லூரிகள் துவங்க எங்களால் அனுமதி வழங்க இயலவில்லை என்ற ஒரு கருத்தினை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீதிமன்றத்தில் சொன்னதாகக் கூறினார்கள். ஆமாம், நாங்கள் சொன்னோம். தனியார் கல்லூரிகளை அனுமதிக்கக் கூடாது. அரசே ஏழை எளிய மாணவர்கள், பிற்படுத்தப்பட்ட மாணவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள், தாழ்த்தப்பட்ட மாணவர்கள் குறைந்த கட்டணத்தில் சட்டக் கல்வியினைப் பெற வேண்டும் என்ற நல்ல நோக்கத்திலே அரசே அந்தச் சட்டக் கல்லூரிகளை ஆரம்பிக்க இருப்பதாக நம்முடைய வாதங்களை நாம் நீதிமன்றத்திலே வைத்தோம். ஆனால், நம்முடைய வாதத்தினை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை. தனியார் சட்டக் கல்லூரிகள் ஆரம்பிப்பதை நீங்கள் தடுக்கக் கூடாது என்று உயர் நீதிமன்றமும் சொன்னது. அதனைத் தொடர்ந்து உச்ச நீதிமன்றத்திலும் வழக்கினைத் தொடுத்து வழக்காடினோம். உச்ச நீதிமன்றத்திலும் தனியார் சட்டக் கல்லூரிகள் தொடங்குவதை நீங்கள் தடுக்க முடியாது என்று சொல்லி தீர்ப்பளித்ததால், வேறு வழியில்லாத

காரணத்தினால், நாம் அதிலே இப்போது சில திருத்தங்களைச் செய்து, சட்டக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில் தனியார் சட்டக் கல்லூரியினை அனுமதிக்கலாம் என்ற ஒரு முடிவினை எடுத்து, ஒரு திருத்தத்தினைக் கொண்டுவந்து, தற்போது சட்டக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில் நாம் சட்டக் கல்லூரிகளை அனுமதிக்க முடிவெடுத்துள்ளோம். நீதிமன்றத்தில் சொன்னதுபோல, இந்த அரசு ஏற்கெனவே தமிழகத்தில் இருந்த அரசு சட்டக் கல்லூரிகளின் எண்ணிக்கை ஏழு. 2016 ஆம் ஆண்டுக்கு முன்பு தமிழகத்தில் இந்த ஆட்சி பொறுப்பேற்பதற்கு முன்பு இருந்தது ஏழு கல்லூரிகள். ஆனால், இந்த மூன்றரை ஆண்டு காலத்தில் மட்டும், தமிழகத்தில் சட்டக் கல்லூரிகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு ஒரே ஆண்டில் 3 சட்டக் கல்லூரிகளை அதுவும் பிற்படுத்தப்பட்ட மாவட்டங்கள் — நன்றாகக் கவனிக்க வேண்டும் — தருமபுரி மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம் மற்றும் விழுப்புரம் மாவட்டம் ஆகிய மூன்று மாவட்டங்களில், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கின்ற இந்த மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்து, அந்த மாவட்டங்களுக்கு கல்லூரியினைக் கொடுத்து, தற்போது மூன்றாவது ஆண்டாக அந்தக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன.

முற்பகல் 10—30

அதற்காக ஒவ்வொரு கல்லூரிக்கும் கட்டடங்கள் கட்டுவதற்கு 70 கோடி ரூபாய் என்ற மதிப்பில், 210 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து அந்தக் கட்டடங்களை இப்போது கட்டிக்கொண்டிருக்கிறார்கள். விழுப்புரம் சட்டக் கல்லூரி, புதிய கட்டடம் இந்தச் சட்டமன்றம் முடிந்தவுடனே திறக்கப்பட இருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், இந்த ஆண்டு மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர் அவர்கள் விதி 110 அறிக்கையின்கீழ் தமிழகத்தில் மேலும் 3 புதிய சட்டக் கல்லூரிகள் தொடங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். ஏற்கெனவே இருந்த 7 சட்டக் கல்லூரிகளோடு, கடந்த இரண்டு கல்வி ஆண்டுகளில் தமிழகத்தில் 6 புதிய சட்டக் கல்லூரிகளையும், சென்னை சட்டக் கல்லூரியை இரண்டாகப் பிரித்துக் கட்டப்பட்டதையும் சேர்த்து, 14 சட்டக் கல்லூரிகளைத் திறந்தவர் மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எதிர்காலத்தில் அங்கே சட்டக் கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்று, சட்டக் கல்லூரி இயக்குநரிடமிருந்து கோரிக்கை வரப்பெற்றால், மாணவர்களின் தேவை இருக்கும்பட்சத்தில் அங்கே அவசியம் அமைய வேண்டும் என்று இயக்குநரிடமிருந்து பரிந்துரை பெறப்பட்டால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை கண்டிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்கள்.*

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு புள்ளிவிவரத்திற்காகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், 2012 ஆம் ஆண்டு 2,484 பேர் தமிழ்நாட்டில் சட்டம் பயின்றிருக்கிறார்கள். அதில் 1,760 பேர் வெளி மாநிலங்களிலிருந்து சட்டம் பயின்று வந்து இங்கே பதிவு செய்திருக்கிறார்கள். 2013–ல் 1,822 பேர் தமிழ்நாட்டில் சட்டப் படிப்பை பெற்றிருக்கிறார்கள். அதில் 1,603 பேர் வெளி மாநிலத்திலிருந்து பெற்றிருக்கிறார்கள். 2014 ஆம் ஆண்டு 2,191 பேர் தமிழ்நாட்டிலிருந்து பயின்றிருக்கிறார்கள். அதில் 1,631 பேர் வெளி மாநிலத்திலிருந்து பெற்றிருக்கிறார்கள்.*

இந்த புள்ளிவிவரங்கள் இன்னும் நீண்டுகொண்டு போகின்றன என்று தெரிந்தாலும், எதைக் காட்டுகிறது என்று சொன்னால், தமிழ்நாட்டில் பதிவு செய்யக்கூடிய வழக்கறிஞர்களில் சரிபாதி அளவிற்கு வெளி மாநிலங்களில் பயின்று வரக்கூடிய நிலை இருப்பதை நீங்கள் கருத்தில் கொள்ளவேண்டும்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, தனியார் சட்டக் கல்லூரிகள் 8–ம், அரசு சட்டக் கல்லூரிகள் 12–ம் சேர்த்து 20 கல்லூரிகள் இருக்கின்றன என்று சொன்னார். உண்மைதான். ஆனால், கர்நாடகாவில் 93 சட்டக் கல்லூரிகளும், ஆந்திரபிரதேசத்தில் 37 சட்டக் கல்லூரிகளும் இன்றைக்கு இருக்கக்கூடிய நிலையினை கருத்திலேகொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகமான சட்டக் கல்லூரிகளை தமிழ்நாட்டில் தொடங்குவதற்கு முன்வர வேண்டுமென்ற கோரிக்கையை வைக்கிறேன்.

[2019 ஜூலை 18

இன்னொரு கோரிக்கையானது, காஞ்சிபுரம் மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் கட்டடம் கட்டுவதற்கான இட ஒதுக்கீடு முடிந்துவிட்டது. அதற்கான நிதியை ஒதுக்கீடு செய்து இந்த ஆண்டே நிறைவேற்றித் தருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல, தமிழகத்தில் குறிப்பாக பிற்படுத்தப்பட்ட மாணவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் மற்றும் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் குறைந்த கட்டணத்தில் கல்வி பெற வேண்டுமென்ற நல்ல நோக்கத்தில்தான், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள், எந்த அரசும் செய்யாத அளவிற்கு ஒரே ஆண்டிலேயே 3 சட்டக் கல்லூரிகளை ஏற்படுத்திக்கொடுத்து, ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டும் 3 சட்டக் கல்லூரிகள் புதிதாக தொடங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப கண்டிப்பாகப் பரிசீலனை செய்து, சட்டக் கல்வி அந்த மாணவர்களுக்கு சென்றடைவதற்கான உரிய நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் இந்த ஆண்டே கட்டப்பட வேண்டுமென்று சொல்கிறார். கண்டிப்பாக, நீதிமன்றத்திடமிருந்து நாளையே பரிந்துரை வந்தால், நீதிமன்றத்திற்கான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கு காலதாமதம் இல்லாமல் உடனடியாக அதற்கு ஆணையை பிறப்பிக்கக்கூடிய அரசு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. அந்தப் பரிந்துரை பெறும் பட்சத்திலே உடனடியாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை ஏற்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 135, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*